# சுவாமி விபுலானந்தரின் சிற்ப ஓவிய நோக்கும் மட்டக்களப்பில் அவரது உருவப் படிமங்களும்

சிவரெத்தினம் சு

சுவாமி விபுலானந்த அடிகள் ஒரு பல்துறை விற்பனராவார். அவர்பற்றி வெளிவந்த பெரும்பாலான ஆய்வுகள் இயலிசை நாடகம் தொடர்பாகவே சுட்டிக்காட்டுகின்றன. ஆனால் அவர் சிற்பம், ஓவியம் தொடர்பாக ஆழமான நோக்குநிலையினைக் கொண்டிருந்தார் என்பது அவரது எழுத்துக்கள் வாயிலாக அறியக்கிடக்கின்றது.

இவ்வாய்வானது விபுலானந்தரின் சிற்ப, ஓவிய நோக்கு நிலையினைத் தெளிவுபடுத்தி அதனை தற்கால ஓவியக் கொள்கைகளுடன் தொடர்புபடுத்தி வியாக்கியானப்படுத்த முயல்கின்றது. அவ்வியாக்கியானத் தெளிவுடன் மட்டக்களப்பில் அவரது உருவப்படிமங்களின் தோற்றநிலையினை எடுத்துநோக்க முயல்வதுடன் அத்தோற்றநிலைக்கான கருத்து நிலை யினையும் அக்கருத்து நிலைக்கு அடிப்படையாக அமைந்த மட்டக்களப்பின் காட்சிப்புலப் பண்பாட்டினையும் விளக்குவதாக இவ்வாய்வு அமையும்.

**திறவுச் சொற்கள்:** சுவாமி விபுலானந்தர், சிற்ப ஓவியம், உருவப் படிமங்கள்

*சுவாமி விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம், கிழக்குப் பல்கலைக்கழகம்.*
*sivaretnam10@yahoo.com*